# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 08–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**<u>I.A. No. 02 of 2024 in O.S. No. 31 of 2017</u>**
**<u>(CNR No. TNSA13-000151-2017)</u>**

குஞ்சம்மாள் .. மனுதாரர் / வாதி

எதிராக

1. கலியபெருமாள்
2. கருப்பையா .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 22.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராஜேஷ்கண்ணா அவர்களும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.S. ராஜகுமார் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

***.. 2 ...***

**<u>உத்தரவுரை</u>**

வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்து, அவர் மூலம் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிவேண்டி மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர் / வாதி, அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை மனுதாரர் / வாதியின் கணவர் செல்லமுத்து படையாச்சி உயிருடன் இருந்தவரை அனுபவம் செய்து வந்தார். அவருக்கு பின்னிட்டு மனுதாரர் / வாதி தன்னுடைய மகளின் உதவியுடன் தாவா சொத்தை அனுபவம் செய்துவருகிறார். மேற்படி தாவா சொத்தை மனுதாரர் / வாதி அனுபவம் செய்வதற்குண்டான கணினி பட்டா, ஆத்தூர் வட்டாட்சியர் வழங்கிய அனுபவ சான்று மற்றும் அடங்கல் ஆகியவை தற்பொழுதுதான் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணங்களை மனுதாரர் / வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்வதற்காக அசல் வழக்கில் மனுதாரர் / வாதி சாட்சியமளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே வா.சா.1–ஐ மீண்டும் அழைக்க உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இல்லையெனில் மனுதாரர் / வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். அசல் வழக்கில் வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்யவும், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யவும் அனுமதித்தால்தான், அசல் வழக்கில் ஒரு இறுதியான அறுதியிட்ட முடிவிற்கு வர ஏதுவாக இருக்கும். மனுதாரர் / வாதி இம்மனுவுடன் அவரது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தையும்

.. 3 ...

தாக்கல் செய்துள்ளார். எனவே வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து சாட்சியமளிக்கவும், ஆவணங்களை குறியீடு செய்யவும் அனுமதிவேண்டி மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **1–ம் எதிர்மனுதாரர் / 1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2–ம் எதிர்மனுதாரர் / 2–ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மறுத்துள்ளனர். மேலும், மனுதாரர் / வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டு, பின்பு மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகளையும் முழுமையாக விசாரணை செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வேண்டுமென்றே மனுதாரர் / வாதி காலம் கடத்தும் எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் கடந்த 22.04.2022 அன்று மனுதாரர் / வாதி தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 9 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பல வாய்தாக்கள் மனுதாரர் / வாதி தரப்பில் வாங்கப்பட்டு, கடந்த 19.01.2023 அன்று மனுதாரர் / வாதியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. பின்பு பல வாய்தாக்கள் மனுதாரர் / வாதி தரப்பில் கேட்கப்பட்டு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில், எவ்வித சாட்சியும் வாதி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததால் கடந்த 11.07.2023 அன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்ட நிலையில், மனுதாரர் / வாதி இம்மனுவை காலம் தாழ்த்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய தேதியிட்ட ஆவணங்கள்

.. 4 ...

என்பதால் மேற்படி ஆவணங்கள் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. மேலும் மனுதாரர் / வாதி மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு தகுந்த ஏற்கத்தக்க காரணங்கள் எதுவும் சொல்லாத நிலையில், மேற்படி மனு சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர் / வாதி தனது மனுவில், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தை மனுதாரர் / வாதியின் கணவர் செல்லமுத்து படையாச்சி உயிருடன் இருந்தவரை அனுபவம் செய்து வந்ததாகவும், அவருக்கு பின்னிட்டு மனுதாரர் / வாதி தன்னுடைய மகளின் உதவியுடன் தாவா சொத்தை அனுபவம் செய்துவருவதாகவும், மேற்படி தாவா சொத்தை மனுதாரர் / வாதி அனுபவம் செய்வதற்குண்டான கணினி பட்டா, ஆத்தூர் வட்டாட்சியர் வழங்கிய அனுபவ சான்று மற்றும் அடங்கல் ஆகியவை தற்பொழுதுதான் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் / வாதி

*.. 5 ...*

தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார். மாறாக எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய எதிருரையில், மனுதாரர் / வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டு, மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகளையும் முழுமையாக விசாரணை செய்யப்பட்டுவிட்டதாகவும், அதன் பின்னர் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டதாகவும், இந்நிலையில் மனுதாரர் / வாதி வேண்டுமென்றே காலம் கடத்தும் எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் கடந்த 22.04.2022 அன்று மனுதாரர் / வாதி தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 9 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டதாகவும், பல வாய்தாக்கள் மனுதாரர் / வாதி தரப்பில் வாங்கப்பட்டு, கடந்த 19.01.2023 அன்று மனுதாரர் / வாதியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், அதன் பின்னிட்டு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும் மனுதாரர் / வாதி தரப்பில் எவ்வித சாட்சியும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததால் கடந்த 11.07.2023 அன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டதாகவும், மேலும் மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய தேதியிட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும், மனுதாரர் / வாதி மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு தகுந்த காரணங்கள் எதுவும் சொல்லாத நிலையில், மேற்படி மனு சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் கூறியுள்ளார்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா சொத்தை மனுதாரர் / வாதி அனுபவம் செய்வதற்குண்டான கணினி பட்டா,

.. 6 ...

ஆத்தூர் வட்டாட்சியர் வழங்கிய அனுபவ சான்று மற்றும் அடங்கல் ஆகியவை தற்பொழுதுதான் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கப்பெற்றது என கூறியுள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் என்பதால், வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்து, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்தால்தான், அசல் வழக்கில் ஒரு இறுதியான அறுதியிட்ட முடிவிற்கு வர ஏதுவாக இருக்கும். மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்க முடிவு செய்கிறது.

7. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 08–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.08.08 18:25:41 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

<u>மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

**இ.ம.வ. எண் 02/2024 in அ.வ.எண்.31/2017**

<u>மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.08.08 18:26:04 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 02/2024**

**----------------**

**அ.வ. எண் 31/2017**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 08.08.2025